# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,135 — 1935 ம் ௵ ஆடிமீ 26 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### காணி விற்பனவு.

**Anuradhapura No. 174.**—1935 ம் ஆண்டு புரட்டாதிமீ 12 ந் திகதி, காலை 10 மணியளவில் மின்னேரியா கிராமக் கோட்டு வீட்டில் வடமத்திய மாகாணக் கவர்ண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது நீகதுவிடப்படும் அல்லது வேறுமாதிரியாக விற்கப்படும்.

நாலு காணித்துண்டுகள், வடமத்திய மாகாணத்து தம்பங்கடவை டிஸ்திறிக், சிங்களப்பற்றுவிலிருக்கின்றது.

பிளான் இலக்கம் I. S. P. P. 6. குறிச்சி—மின்னேரியா. உரித்தாளி—முடிக்குரியது.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. றூ. ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 29 | மீகாகபாயகெள | .. ஜீ. பீ. எல். கருணரெட்ன, மின்னேரியா | தோட்டமும் நெற்காணியும் | 8 3 36 | 35 |
| 45 | டம்பககாவத்த | .. ஜே. ஏ. டீ. பிரான்சிஸ் அப்புகாமி, மின்னேரியா | ஷை .. | 6 3 10 | 35 |
| 48 | ஹமில்லேலஹூக்கலான .. | ஷை .. | புதிதாய்த் துப்பரவு செய்யப்பட்டது | 4 0 10 | 35 |

பிளான் இலக்கம் F. T. P. இல். 9. குறிச்சி—கிரித்தால். உரித்தாளி—முடிக்குரியது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 411 | பளுககாவத்த | .. டீ. பீ. எச். மாட்டின் டீ சில்வா, கிரிந்தால | புதிதாய்த் துப்பரவுசெய்யப்பட்டது (நெற்காணி) | 3 3 9 | 30 |

மேலே குறிக்கப்பட்ட காணிகள் நெல்விளைவிப்பதற்காக வதுவைப்பத்திரத்தில் கொடுக்கப்பட்டு இப்பொழுது வதுவைக்காரர்கட்கு விற்கப்படும். இவைகள் கிரித்தால, மின்னேரியா எனுங் குளங்களால் நீர்ப்பாய்ச்சக்கூடியவை. தண்ணீர்வரி செலுத்தப்படல் வேண்டும்.

இந்தக் காணிகளைப்பற்றிய வேறுவிபரங்கள் வடமத்திய மாகாண கவர்ண்மேந்து ஏசன்றுத்துரையிடத்திலும் காணிகளின் படங்களைப்பற்றிய வேறுவிபரங்கள் அளவுக் கந்தோர்த் தலைவரிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1935 ம் ஆண்டு ஆடிமீ 24 ந் உ.

ஆர். எச். வைற்ஹோரன்,
எக்றிங் காணிக் கொம்மிஷனர்.

---

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

**1876** ம் ௵த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் இஸ்லாம் பள்ளி ரோட்டிலிருந்து ரேயில் ரோட்டு நேரே சாயல் ரோட்டுக்குச்சேரும் ரோட்டுக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 340. குறிச்சி—கட்டுகுருந்தை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 23 | கோங்தெரு,பறங்கியாவத்தை, 1 ம் பகுதி ரேயில்வே ரோட்டின் வரிப்பணம் நொம்பர் 45ன் பாகம் | 15 முதல் 30 வருஷம் சென்ற 10 தென்னைமரம் அடங்கிய தோட்டம் | கட்டுகுருந்தையில் இருக்கும் கந்தே துரைகே அகஸ்தீனு பெர்னண்டு | 0 0 6 9 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ஹூ (ஆகஸ்ட்டு) ஆவணி மாசம் 28 ந் தேதியிலன்று 10 மணிக்கு களுத்துறை கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் ததமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1935 ம் ஹூ (ஜுலை) ஆடிமீ 22 ந் உ.

ஜே லேற்,
உதவி அரசாட்சி ஏசண்டு, களுத்துறை.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கீவாவிசையில் ஒரு புதுப் பள்ளிக்கூடம் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 291. குறிச்சி—கீவாவிச கபடகமம், கீவாவிச கோறளை, பாத்தகீவகெற்ற
கண்டி டிஸ்திறிக், மத்திய மாகாணம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம் ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கொனத்துவ .. | 6 மாச வயசுள்ள மரக்கறி வகை உள்ள சேனை | கே. பி. கீவவிசவும், கே. பி. பண்டாவும், கீவவிச கபடகமம் | 0 1 25·2 |
| 2 | வெலங்ககாபிட்டி .. | ஷை .. | எஸ். டி. எம். அப்புகாமி, எஸ். டி. எம். களுபண்டா, எஸ். டி. எம். முதியான்சை, எஸ். டி. எம். கிரிபண்டா, எஸ். டி. எம். உக்குபண்டா, எஸ். டி. எம். டிங்கிரிபண்டா, கீவாவிசகபடகமம் | 0 2 25 |
| 3 | ஷை .. | சேனை .. | யு. எம். கே. மெனிக்கா, கீவாவிச, கபடகமம் .. | 0 0 29·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ஹூ (ஆகஸ்ற) ஆவணி மாசம் 31 ந் தேதியிலன்று 10 மணிக்கு மாருசனை பாடசாலையில் என்முன்பாக வெளிப்பட்டுத ததமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுககாய்த் தாம் சாதிக்கும் உரிததுகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1935 ம் ஹூ (ஜுலை) ஆடிமீ 20 ந் உ.

டீ. சீ. ஆர். குணவர்தன,
உதவி அரசாட்சி ஏசண்டு, கண்டி.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

*சாமான்கள் கொடுக்கிறதற்குக் கேள்விப்பத்திரம்.*

அரை அந்த உப்புக்கொள்ளககூடிய நார்க்கடகம், 12 அடி நீளம் 4 அடி அகலம் விசாலமுள்ள ஓலைப்பாய், பனை ஓலை, என்னும் இந்தச் சாமான்கள் கேட்குநேரமே யாழ்ப்பாணம் உப்புமால், காரணவாய், வெல்லப்பரவை, திவியாதெரு உப்பளம் தொண்டமனர் உப்புக்குதம் ஆகிய இந்த விடங்களில் கொடுக்கிறதற்கு 1935 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1936 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதி வரையில் ஒப்பந்தம் சேட்க விரும்புவருடைய கேள்விப்பத்திரம் ஏற்கப்படும்.

2. கேள்விப்பத்திரம் இணைப்பிரதியாகவும் முத்திரையிடப்பட்டதாயு மிருக்கவேண்டும். மூலப்பிரதி வடமாகாண ஏசன்றுத்துரை அவர்களுக்கும் இணைப்பிரதிகெ மும்பு அரசிறை உப்பு ஆலோசனை காத்தருக்கு விலாசம் போட்டிருசதல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரம் கேள்விக்காரன் தானுகக் கொடுககலாம் அல்லது தபாலில் அனுப்பலாம். இரண்டு பிரதிகளும் ஒரே நேரத்தில் அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரத்தில் Tender for Supplying Materials, 1935—1936 என்று உறையின் இடதுபகக மேல மூலையில் போடப்பட்டிருத்தல் வேண்டும். அப்பத்திரம் யாழ்ப்பாணக் கச்சேரியில் 1935 ம் ஆண்டு ஆவணி மாதம் 14 ந் திகதி பிற்பகல் 2 மணிக்குமுன் சேரவேண்டும்.

5. கேள்விப்பத்திரம் எழுத மாதிரி கடதாசி யாழ்ப்பாணக் கச்சேரியில் கேட்டுப் பெற்றுககொள்ளலாம் அந்த மாதிரிக் கடதாசியில் எழுதாத வேறு எவ்வித பத்திரமும் ஏற்கப்பட மாட்டாது. மாறறங்களுககு கையொப்ப முதலெழுத்துக ளிடப்பட வேண்டும். அல்லாவிடில் கேள்விப்பத்திரம் பிழையென விலக்கப்படும்.

6. கச்சேரியில் ரூமா 20 கட்டிப் பற்றுச்சீட்டு காட்டினவருக்கே மாதிரிக் கடுதாசி கொடுபடும் ஒருவருடைய ஒப்பநதக் கேள்வியை ஏற்றுக்கொண்டதென்று அறிவித்தல கொடுத்த நாள் தொடக்கம் பத்து நாளைக்குள் ஒப்பந்தம் ஏற்க பிணை கொடுக்க அல்லது உறுதிமுடிக்கத் தவறினுல், கட்டின காசு கவண்மேந்துக்கு இருமாகும் அப்படித் தவறியவர் கவண்மேந்து ஒப்பதம் கொடுக்கப்படாதென்று விலககப்பட்ட ஒப்பந்தக்காரருடைய பெயர் பதியப்படும் இடாப்பில் பதியப்படுகிறதற் காளாவர் ஒப்பந்தம் கைச்சாத்திட்டு முடிவானவுடன் மற்றக் கேள்விககாரருடைய காசு திருப்பிக் கொடுபடும்.

7. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தோடு இரண்டு தகுதியானபேர் பிணை நிற்போமென்று சம்மதம் காட்டும் பத்திரமும் அணைத்திருகக வேண்டும். அவர்களுடைய மேல் விலாசமும் காட்டியிருக்க வேண்டும்.

8. ஒப்பந்தம் கொடுக்கும் நாளில் கொடுக்கவேண்டிய சாமான்களுக்கு மாதிரிப் பொருட்களும் கொடுக்கவேண்டும்.

9. ஒப்பநதத்தைச் சரியாய் ஒப்பேற்றுவதற்காகப் போதிய பிணைகாரர் பிணையுறுதிக்குச் சேரவேணும். பிணையுறுதியின் தொகையும் வேறுவித தேவையான விபரங்களும் கந்தோரில் கேட்டுக்கொள்ளலாம்.

10. அரசாட்சியாரிடம் ஒப்பந்தம் எடுத்து அவ்வொப்பந்தத்தை நிறைவேற்றத் தவறியவர்களுடைய டாப்பில் தனித்தேனும் மற்றவர்களுடன் ஒருமித்தேனும் காணப்படும் பேர்வழிகாரருடைய ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அன்றியும் ஒப்பந்தக்காரன் அந்த இடாப்பிலுள்ளவர்களில் யாரையாவது அல்லது வட மாகாண அரசாட்சி ஏசன்றர் தமக்குப் போதியதெனக் கண்ட நியாயங்களை எழுத்தில் கொடுத்துத் தடைநொத்திசு கொடுப்பின் அப்படித் தடைசெய்யப்பட்டவரைத் தம் ஊழியத்தில் உபயோகிக்கப்படாது.

11. மேற்சொல்லப்பட்ட பிரமாணங்களுக்கு அமையாத யாதொரு கேள்விப்பத்திரமும் கவனிககப்பட மாட்டாது.

12. எந்தக்கேள்விப் பத்திரத்தையும அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்க அல்லது நியாயஞ் சொல்லாது மறுக்க முழு உரித்தும் கவுண்மேந்து ஏசண்டுக் குண்டு.

ஈ. நீ. டைசன்,
வடமாகாண அரசாட்சி ஏசன்று.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1935 ம் ஹூ ஆடிமீ 23 ந் உ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.